ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,215—1962 ජූලි 20 වැනි සිකුරාදා—1962.7.20

13,215 ம் இலக்கம்—1962 ம் ஆண்டு யூலை மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் |
|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனங்கள் .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | — |
| அரசாங்க அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — |
| நீதாசன சேவை அதிகார சபையின் நியமனங்களும் பிறவும் .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. | 427 |
| விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | — |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 428 |
| மாதுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| " மதுவரிச்சட்ட " அறிவித்தல்கள் .. .. | — |


## அரசாங்க அறிவித்தல்கள்

### விலாச மாற்றம்

கொழும்பு 1, ஹேமால கட்டிடத்திலிருந்த பாதுகாப்பு வெளிநாட்டு விவகார அமைச்சின் பிரஜா உரிமைக்காரியாலயம், 1962 ம் ஆண்டு ஜூலை மாதம் 4 ந் தேதி தொடக்கம், கொழும்பு 1, செனேட் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

தொலைபேசி எண்களில் எவ்வித மாற்றமுமில்லை.

நிரந்தரக் காரியதரிசி,
பாதுகாப்பு, வெளிநாட்டு விவகார அமைச்சு.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஜூலை மீ 12 ந் உ.

7-679

---

LD—B51/53

### இறப்பர் புனர் நடுகை உதவிச் சட்டம்

இறப்பர் புனர் நடுகை உதவிச் சட்டத்தின் (அத்தியாயம் 437) 8 ம் பிரிவின்கீழ் காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.

சீ. பீ. டி சில்வா,
காணி, விவசாய, மின்சார, நீர்ப்பாசன அமைச்சர்.

கொழும்பு, 7.7.1962.

#### ஒழுங்குவிதி

1958, ஏப்ரில் 18 ம் தேதிய 11,300 இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டுக் காலத்துக்காலம் திருத்தியமைக்கப்பட்டுள்ளபடியான இறப்பர் புனர் நடுகை உதவித் திட்ட ஊழியர் (சகாயநிதி) ஒழுங்குவிதிகள் 1958, மேலும் ஒழுங்குவிதி 4 (1) ன் கண் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றன :—

(1) " சி " என்னும் பந்தியில் " நீங்கும் ஒவ்வொருவருக்கும் " என்பதற்குப் பதிலாக " நீங்கும் ஒவ்வொருவருக்கும்; அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(2) " சி " என்னும் பந்தியை உடனடுத்து கீழ் குறிப்பிடப்படும் புதிய பந்தியை இடுவதன் மூலமும்

"(டி) சிங்கள மொழியில் தம்மாற் கடமையாற்ற இயலாதெனும் காரணத்தினால் 1963 (மார்கழி) 31 ம் தேதியன்று அல்லது அதற்குமுன் பகுதியின் சேவையிலிருந்து இளைப்பாற விரும்பும் ஒவ்வொருவருக்கும் அவரின் இளைப்பாறுதல் உறுதியாகுமிடத்து "

7-613

### சம்பளச் சபைச் சட்டம்

சம்பளச் சபைச் சட்டத்தின் (அதிகாரம் 136) 9 ம் பிரிவின் பிரகாரம், கறுவாத் தொழில் சம்பளச் சபையில், 1962 ம் ஆண்டு மே மாதம் 10 ம் திகதி தொடக்கம், 3 ஆண்டு காலத்திற்கு, அங்கம் வகிக்குமாறு, பின்வருபவர்களை கௌரவ. தொழில் தேசீயமய சேவைகள் மந்திரி மகிழ்ச்சியுடன் நியமித்துள்ளார் என்று, 1943 ம் ஆண்டுச் சம்பளச் சபை விதிகளின் 26 ம் விதியின் பிரகாரம், இத்தால் அறிவிக்கப்படுகிறது.

வி. எஸ். எம். டி மெல்,
பதில் நிரந்தரக் காரியதரிசி,
தொழில், தேசீயமய சேவைகள் அமைச்சு.

கொழும்பு,
1962 ம் ஆண்டு யூலை மாதம் 11 ந் தேதி.

#### நியமன அங்கத்தவர்கள்

1. திருமதி. சில்வியா பர்ணந்து
2. திரு. சீ. ஈ. சிமித்திரா ஆராச்சி
3. திரு. எஸ். ஏ. விஜயதிலகா

#### முதலாளிகளின் பிரதிநிதிகள்

1. திரு. என். எஸ். டி எஸ். விக்கிரமசிங்க
2. திரு. டி. டபிள்யூ. விக்கிரமரத்ன
3. திரு. லியோட் விக்கிரமசூரியா
4. திரு. அஸ்டின் ஏ. டி சில்வா
5. திரு. கே. ஜி. சி. அபேசூரியா
6. திரு. ஜே. ஈ. பீ. ராஜபக்ஷ

#### தொழிலாளரின் பிரதிநிதிகள்

1. திரு. எச். அலெண்டி சில்வா
2. திரு. டி. அவுடின் மென்டிஸ்
3. திரு. கே. டபிள்யு. றூசன் சில்வா
4. திரு. எச். சீ. வெடிவர்த்தன
5. திரு. எம். ஜி. மென்டிஸ்
6. திரு. டி. பியதாச

7-700

4 B ம் மாதிரிப்பத்திரம்

## 1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்

சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாக்கிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் (1) ம் (2) ம் உட் பிரிவுகளின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்குள் பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாறாக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும் பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாக்கிஸ்தானிகளைப் பதிவு செய்யும் அதிகாரி விஜயபால டியூடர் ஜயசிங்க ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடை கூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடை கூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்பட வேண்டும்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஜூலை மீ 10 ந் உ.

வி. டி. ஜயசிங்க,
இந்தியர் பாக்கிஸ்தானிகளை பதிவு செய்யும் அதிகாரி.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்யும்படி விண்ணப்பஞ் செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ் செப்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவு செய்யும் பொழுதே இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்ய விண்ணப்பஞ் செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இனமுறையும் |
|---|---|---|
| L. 8624—13.7.51 | கந்தன் அடைக்கன் சிலம்பன், P. 29, பாறதெக்க, புசல்லாவை | சிலம்பாயி (மனைவி), ஜயலக்சிமி (மகள்), மகேஸ்வரி (மகள்), லலிதா (மகள்), சரோஜா (மகள்) |
| W. 6976/T—31.7.51 | சுப்பையா பாலகுருசாமி, 23/1, பாடசாலை வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் | காளியம்மாள் (மனைவி), ராஜு (மகன்), முத்துலெச்சிமி (மகள்), பாலசுப்ரமணியம் (மகன்), மாரிசாமி கணேசலிங்கம் (மகன்). |

7-566

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### அறிவித்தல்

1958 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச்சட்டத்தின் பிரிவு 51 உபபிரிவு 3ன் படி கீழ்வரும் அட்டவணையில் முதலாம் நிரலில் சொல்லப்பட்ட கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளர்கள் இரண்டாம் நிரலில் சொல்லப்பட்ட நிர்வாக மாவட்டத்துக்கு மூன்றும் நிரலில் சொல்லப்பட்ட திகதி தொடக்கம் மாற்றப்பட்டுள்ளனரென இத்தால் அறிவிக்கின்றேன்.

ஜே. வி. பொன்சேக்கா,
கமத்தொழிற் சேவை ஆணையாளர்.

கொழும்பு,
1962 ம் ஆண்டு ஜூலை மீ 11 ந் உ.

### அட்டவணை

| முதலாம் நிரல் | இரண்டாம் நிரல் | மூன்றும் நிரல் |
|---|---|---|
| எனெஸ்ற் சேபால குணதிலகா | குருநாகல் | 11.6.62 |
| சுப்பையா சண்முகசுந்தரம் | மன்னர் | 11.6.62 |
| கௌனதிம்பால ஜோஜ் விக்கிரமசிங்க | பொனறுகல | 1.7.62 |

7-654

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள்யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், கருமாலயம், கொழும்பு. அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது